REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 23உ புதன் (9—11—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 24உ வியாழன் (10—11—55) [இதழ் 126

இட்லி-சாம்பார் பிரபலமாகிவிட்டதாம்!

சென்னை, நவ. 8—

ரொட்டி-வெண்ணெய் இவற்றிற்குப் பதிலாக சில மருத்துவ மனைகளில் நோயாளிகளுக்கு இட்லி-சாம்பார் தரும் முயற்சிக்குப் பெரும் ஆதரவு கிடைத்திருப்பதாக சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி தெரிவித்திருக்கிறார். மலிவானவை என்பதன்னியில், இட்லி-சாம்பாரையே பெரும்பாலான நோயாளிகள் விரும்புகின்றனர் என்றும், ரொட்டி-வெண்ணெய் கேட்போர் தொகை குறைந்துவருவதாயும், இதர மாவட்ட மருத்துவமனைகளிலும் ரொட்டி-வெண்ணெய்க்குப் பதிலாக இட்லி-சாம்பார் தருவதற்கான ஏற்பாடுகளை சர்க்கார் மேற்கொள்ளும் என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

காங்கிரசில் சாதி வெறி தலைவிரி கோலம்!

ஆந்திர மந்திரி ஒப்புதல்

சுதந்திரத்திற்குப் பிறகு சாதிப் பித்து காங்கிரசின் நிரந்தரக் கொள்கையாகிவிட்டதாம்

கர்னூல், நவ. 8—

காங்கிரசாரிடையே நிலவும் சாதி வெறி நாடறிந்த ஒன்றாகும். அந்த உண்மையை ஒளிவுமறைவின்றி ஒப்பியிருக்கிறார், ஆந்திர மந்திரி லட்சண்ணா.

ஆந்திரப் பிரதேசக் காங்கிரசில் சாதி வெறி தலைவிரித்தாடுகிறதாம். அப்படிக் குற்றம் சாட்டியிருக்கிறார் அவர்.

இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில், 'பிராமணரல்லாதார் நடத்திய நீதிக் கட்சியினர்கூட, இன்று காங்கிரசில் நிலவுகிற அளவு சாதி வெறி கொண்டிருக்கவில்லை; சாதி வெறி கொண்டிருப்பது தவறில்லை என்பதே இன்று காங்கிரஸ் அரசியலின் நிரந்தரமான கொள்கையாயிருக்கிறது," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அரசியலில் இருந்த சாதி வெறியை காங்கிரஸ்தான் அகற்றியது என்பதில், காங்கிரசார் நியாயமாக பெருமை கொள்ளலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

"ஆனால், சுதந்திரத்திற்குப்பின், காங்கிரஸ், சாதி வெறிக்கு அடிமைப்பட்டுவிட்டது," என்று அவர் தெளிவாகக் கூறினார்.

'டையூ' பெயர் 'டோவ்' என்றாகிறது!

ராஜ்கோட், நவ. 8—

பழைய ரிகார்டுகளில் 'டையூ' என்று இல்லை—'டோவ்' என்றுதான் இருக்கிறது என்பதால், போர்ச்சுகீசிய அதிகாரிகள், டையூ திட்டின் பெயரை 'டோவ்' என மாற்றத் திட்டமிடுவதாகக் கூறப்படுகிறது.

டையூவில் உள்ள ஜெயின் கோவில் ஒன்றையும் போர்ச்சுகீசிய அதிகாரிகள் சர்க்கார் வசமாக்க முயற்சிப்பதாயும்; அவ்வாறு செய்யக்கூடாது என ஜைனர் தூதுக் குழு ஒன்று கோரியது பலனில்லாது போய் விட்டது என்றும் கூறப்படுகிறது.

மாநில புது அமைப்புத் திட்டம்

கருத்து வேறுபாடுகளுடன் காங்கிரஸ் செயற் குழு ஆதரவு

உயர் அதிகாரம் பெற்ற எல்லைக் குழு நியமனம்

புதுடில்லி, நவ. 8—

பசில் குழுவின் மாநில புது அமைப்புத் திட்டத்திற்கு காங்கிரஸ் செயற்குழுவினர் பொதுவான ஆதரவை நல்கியிருக்கின்றனராம்.

சிக்கல் மிகுந்ததாயுள்ள மராட்டிய, பஞ்சாப் மாநில அமைப்பைத் தவிர அநேகமாக எஞ்சிய இதர மாநில எல்லைகள் எல்லாம், பசில் குழுவின் சிபாரிசுகளுக்கொப்ப திருத்தி அமைக்கப்படும் என்றும் முடிவு எடுக்கப்பட்டுவிட்டதாம்.

மாநிலங்களிடை எழுந்துள்ள சிறு சிறு எல்லைத் தகராறுகளைத் தீர்த்துவைப்பதற்கென உயர்தர அதிகாரம் படைத்த நால்வரடங்கிய எல்லைக் குழு ஒன்று அமைக்கவும் குழு முடிவு செய்திருக்கிறதாம்.

பிரதமர் பண்டித நேரு, காங்கிரஸ் தலைவர் தேபர், உள்நாட்டு மந்திரி பண்டித பந்த், கல்வி மந்திரி மௌலானா ஆசாத் ஆகிய நால்வரும் குழுவினராயிருப்பராம்.

மராட்டியர், பம்பாயைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மராட்டிய மாநிலம் வேண்டும் என்ற கோரிக்கையைக் கைவிட மறுப்பதாயும், செயற்குழுவினர் தெரிவித்த மாற்றுத் திட்டங்களை ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கவில்லை என்றும், எனவே, அது குறித்து தொடர்ந்து மறுநாள் செயற்குழு விவாதிக்கும் என்றும் கூறப்படுகிறது.

'பஞ்சாப் மொழி வழி மாநிலம் அமைய வேண்டும்' என்ற அகாலிதளக் கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்றும், பண்டித நேரு சீக்கிரமே தாராசிங்கைச் சந்தித்த பின் அது குறித்த இறுதி முடிவு மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்படுகிறது.

'விசால ஆந்திரம்' உடனடியாக அமையவேண்டும் என்று காங்கிரஸ் கருதுவதால், நியமிக்கப்படும் எல்லைக் குழுவினர், அதன் அமைப்பை ஏற்றுக்கொள்ளுமாறு தெலிங்கானா பகுதி காங்கிரசாரை வற்புறுத்துவர் என்றும் தெரியவருகிறது.

மைசூர் உள்ளடங்கிய கர்நாடக மாநிலம்தான் அமைய வேண்டும் என்றும், மைசூர் தனியாக இயங்க அனுமதிக்கப்படமாட்டாது என்றும் காங்கிரஸ் செயற்குழு முடிவு கட்டவிருக்கிறது.

தகராறுக்கு இலக்காகியுள்ள தேவிகுளம், பீர்மேடு வட்டங்கள் குறித்து எல்லைக் குழுவினர், தொடர்புடைய சென்னை, திரு-கொச்சி மாநிலங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவர் என்றும் தெரிய வருகிறது.

அதேபோல காசர்கோடு வட்டம் பற்றி கேரள—கன்னடியரிடையே உள்ள எல்லைத் தகராறு, மேற்கு வங்கம் — பீகாரிடையே உள்ள சிங்பூம் மாவட்டம் பற்றிய தகராறு, கெஞ்சம் பற்றி ஒரிசா—ஆந்திரா இடையேயுள்ள தகராறு, சில எல்லைவட்டங்கள் பற்றி ஒரிசா-உத்தரபிரதேசம் பற்றிய தகராறு முதலியவை எல்லாம் பற்றி தொடர்புடையோருடன் எல்லைக் குழுவினர் விவாதிப்பர் என்றும் கூறப்படுகிறது.

கபார் கானுக்கு அழைப்பு?

காஷ்மீர் பற்றி பாகிஸ்தான் நடத்தவிருக்கும் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அப்துல் கபார் கானுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

'மக்கட் தொகைப் பெருக்கம்: யுத்தமூட்டும் அபாயமுடையது'

டர்டம், நவ. 7—

"ஆசிய நாடுகளில் வேகமாக வளர்ந்துவரும் மக்கட் தொகை, யுத்தம் மூளக் கூடும் என்ற அச்சத்தை உள்ளடக்கியதாகும்," என்று, அகில உலக மக்கள் தொகை நிபுணர் மாநாட்டினர் எச்சரித்திருக்கின்றனராம்.

'வேறு வெளிநாடுகளில் குடியேறுவதற்கு வாய்ப்பில்லாததால், எண்ணிக்கையில் வளர்ந்துவரும் மக்கள், பலாத்கார ரீதியில் தங்களுக்கு நிவாரணம் தேடிக்கொள்ள முயற்சிக்கலாம்' என்று மாநாட்டில் கூறப்பட்டதாம்.

இந்தியாவின் பிரதிநிதியாக மாநாட்டில் கலந்துகொண்ட டாக்டர் எஸ் சந்திரசேகரன், இந்தச் சிக்கல் ஜப்பானில் மிக கடுமையாக இருப்பதாக இங்கு தெரிவித்திருக்கிறார்.

கருச் சிதைவை சர்க்கார் சட்டரீதியாக மேற்கொள்ள வேண்டிய அவசியமான அளவிற்கு ஜப்பானில் மக்கள் தொகை வளர்ச்சி அபரிமிதமாக இருந்து வருகிறது என்றும், கருச் சிதைவை, சட்டமாக்கியிருக்கும் நாடு ஆசியாவிலேயே ஜப்பான் ஒன்றுதான் என்றும், சுமார் 12 இலட்சம் கருச் சிதைவுகள் மேற்கொள்ளப்பட்டன என்றும், இன்னும் 10 இலட்சம் சிதைவுகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'நிரந்தரமான அமைதியின்மை ஏற்படும்'

கேரள தலைவர்களுக்கு எச்சரிக்கை

"தென் திருவிதாங்கூரிலுள்ள தமிழ் தாலுகாக்களை கேரளத்துடனேயே வைத்திருக்க வேண்டுமென்று முயற்சிப்பது, அப்பகுதி மக்களின் விருப்பத்திற்கு விரோதமாகும்; இதனால், கேரள மாநில அரசியலில் ஒரு நிரந்தரமான அமைதியின்மை ஏற்படும்," என்று, எர்ணாகுளத்தில் நடைபெற்ற சர்வ கட்சி கூட்டமொன்றில் பேசுகையில், முன்னாள் அமைச்சரான ஐயப்பன் அவர்கள் எச்சரித்ததுடன், தமிழ் தாலுகாக்களை கைவிடாமலிருப்பதற்கு கேரளத் தலைவர்கள் முயற்சிசெய்வதையும் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

ரூ. 940-ல் ஒரு 'காங்கிரீட்' வீடு!

சென்னை, நவ. 8—

சுமார் ரூ. 940-க்குள் ஒரு சிறிய காங்கிரீட் வீடு கட்டிக்கொள்ள முடியும் என்றும், அதற்கான முறை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாயும் இந்திய 'காங்கிரீட்' சங்கத்தினர் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தத் தொகைக்குள் வீடு கட்டிக் கொள்ள விரும்புவோருக்கு செலவேதுமின்றி ஆலோசனை வழங்கவும் சங்கத்தினர் முன்வந்திருக்கின்றனர்.

இதனைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு, சென்னை நகரசபைக்கும், இதர பேரூர், சிற்றூர் ஆட்சி மன்றங்களுக்கும் சென்னை சர்க்கார் தகவல் அனுப்பியிருக்கின்றனர் என்று தெரிகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட மாணவர் முன்னேற்ற கழக 2-வது மாநில மாநாடு

சென்னையில் டிசம்பர் திங்களில் கூடுகிறது

★

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம், புது முறுக்கோடு—மறுமலர்ச்சியுடன் பணியாற்ற வேண்டிய கட்டம். அதற்கு வேண்டிய திட்டத்தைத் திறமையோடு தீட்டவும், தியாகத் தீயில் குளிக்கவும் நம்மிடையே உள்ள தீரர்கள் ஏராளம்.

மாணவர் மாநாட்டிற்கு வரவேற்புக் குழு அமைக்கும் வாய்ப்பினை சென்னை திராவிட மாணவர் பெற்றிருக்கின்றனர்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநில மாநாட்டு வரவேற்புக் குழு, சென்னை-இராயபுரம் 'அறிவகத்'தில், 13—11—55 காலை 10 மணிக்கு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் பணியில் அக்கரை கொண்டோர்—அன்பு கொண்டோர், அத்தனை மாணவரையும் 13-ந் தேதி காலை 10 மணிக்கு 'அறிவகத்'திற்கு வருகை தருமாறு அன்புடனழைத்து வேண்டிக்கொள்கிறேன்.

எல்லாக் கல்லூரிகள் மட்டுமல்ல—உயர்நிலைப் பள்ளிகள், தொழிற் கல்லூரிகள் (சட்டக் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் போன்றவைகள்) அனைத்தும் குறைந்தது 2 பிரதிநிதிகளையாவது அனுப்பி, மாணவர் கழகம் வலிவும் பொலிவும் பெற கருத்துக்கள் நல்கி ஒத்துழைக்க அருள்கூர்ந்து வேண்டுகின்றேன்.

13—11—55 ஞாயிறு காலை 10 மணி

'அறிவகம்'—இராயபுரம்—சென்னை

திராவிட மாணவர்கள் நமது விடுதலைப் பட்டாளத்தின் முதல் வரிசையினர்!

அந்தப் பெருமைக்கேற்ற பெற்றி நம்மிடம் உண்டு என்பதை நிரூபிக்கத் தவறாதீர்!

அன்பன்,

கே. ஏ. மதியழகன்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 9-11-'55 புதன்

சாஸ்திரியார் குமுறல்!

"தென்னாட்டவர் குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள்; 'மாகாணப் பித்து'க் கொண்டவர்கள் — என்று குற்றம் சுமத்தப்படுகிறது. அந்தக் குற்றச்சாட்டைப் பொய்ப்பிப்பதாக உள்ளது இந்த ரானடே புத்தகசாலை. வேறொரு மாகாணத்தைச் சேர்ந்த ஜஸ்டிஸ் மகாதேவ கோவிந்த ரானடேயின் பெயரால் அவரது நாட்டுப் பற்றையும், சேவையையும் மனதில்கொண்டு 50 ஆண்டுகளுக்குமுன் நிறுவப்பட்ட இந்தப் புத்தகசாலை, தென்னாட்டவரின் பெரு நோக்குக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

"ஆனல், அதே நேரத்தில், நான் வட நாடு முழுவதும் சுற்றிப் பார்த்திருக்கிறேன். அங்கு எந்த ஒரு நகரிலேனும் 'ராஜாஜி மண்டபம்' என்றோ, 'சீனுவாச சாஸ்திரி கல்லூரி' என்றோ, 'கிருஷ்ணசுவாமி அய்பர் அரசியல் கழகம்' என்றோ இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

"தென்னாட்டவர்தான், இந்தியாவின் இதர பகுதி (வட நாடு)யைச் சேர்ந்த பெரிய மனிதர்களின் நினைவுக்குச் சின்னம் எழுப்பியிருக்கின்றனர்.

"கோகலே பெயரில் ஒரு மண்டபம், விவேகானந்தா பெயரில் கல்லூரி, சுபாஷ் போஸ் பெயரில் ஒரு சாலை, இராமகிருஷ்ணர் பெயரில் பல கல்விக்கூடங்கள், இன்னும் பலர் பெயரில் பல நிறுவனங்கள் — தென்னாட்டில் நிறுவியிருக்கிறோம்; ஆனல், வட நாட்டில்?

"தங்கள் பெயரில் இந்தியாவின் இதர பகுதிகளில் நிறுவனங்கள் இல்லை என்று கவலைப்படுபவர்களல்ல— ராஜாஜி, கிருஷ்ணசாமி அய்யர், சீனிவாச சாஸ்திரி போன்றவர்கள் — ஆனல், 'தென்னாட்டவர் குறுகிய நோக்குடையோர்' என்று குற்றஞ்சாட்டப்படும் போது, இந்த நிலையை எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது."

* * *

மேலே எடுத்துக் காட்டியுள்ளது, கொந்தளிப்பான அரசியல் வாழ்வில் உணர்ச்சி வயப்பட்டு, முன்பின் ஆராய்ந்து பார்க்காமல் அவசரப்பட்டு பேசிய கருத்தன்று.

வடநாட்டவரின் செயலும், சொல்லும் பிடிக்காமல், வடநாட்டவரை 'துவேஷ'க் கண்கொண்டு நோக்கி, வடவரை தூற்றும் 'சிறுமதி'யாளர் ஒருவரின் சொல்லும் அல்ல, அது!

'ஆரியக் கலாச்சாரம் என ஒன்று உண்டு; திராவிடப் பண்பாடு என ஒன்று இருந்து வருகிறது; இரண்டும் முரண்பட்டு இருப்பனவாகும்— ஒன்றை ஒன்று மோதித் தாக்கியே வளர்ந்து வருகின்றன'— எனக் கூறிவரும் குணம் படைத்த இன ஆராய்ச்சியினர் வழிவந்த ஒருவரால் கூறப்பட்ட கருத்தும் அல்ல அது.

'இப்படி எல்லாம் கூறினால்தான், இந்திய மக்களை என்றென்றும் ஒன்று சேரவிடாமல் பிளவுபட்டுக் கிடக்கச் செய்து எப்பொழுதும் ஆண்டுவரலாம்' எனத் திட்டமிட்டுப் பேசியும், செயலாற்றியும்வந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவரின் வாயுரையும் அல்ல அது.

இந்தியத் துணைக்கண்டத்து மக்களுக்கு எதிராக உலகக் கருத்தை உருவாக்கும் கெடு நினைப்புடன், 'இங்குள்ளாரிடை பேதம்—பிளவு—பகை— இருக்கின்றன' எனக் காட்ட முயற்சிப்பதாகச் சொல்லப் பட்டுவந்த வெள்ளை எழுத்தாளர் ஒருவரின் சொல்லும் அல்ல அது.

அவ்வாறு கூறினவர், கட்சிப் பற்றுடைய அரசியல் வாதியல்ல!

கிளர்ச்சிக்காரரல்ல!

திராவிட இனக் காப்பாளரல்ல!

வடவர் ஏகாதிபத்தியத்தின் வைரி அல்ல!

ஓர் எழுத்துக் கூலி அல்ல!

ஆனல், சட்டங்கற்றவர்!

மனு, பராசரர், யாக்ஞவல்கியர் வகுத்துள்ள விதி முறைகளை நன்கு ஓதி உணர்ந்துள்ளவர்!

வடமொழி வல்லுனர்!

ஆரிய கலாச்சாரத்தின் மேம்பாடறிந்து அதனை அழிய விடாது கட்டிக் காத்துவரும் பேரூக்கம் கொண்டிருப்பவர்!

ஏக இந்தியாவில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருப்பவர்!

எல்லாவற்றிலும் சிறப்பாக பிராம்மணோத்தமர்!

நீதிபதியாம்—அதிலும் இந்தியத் தனிப்பெரும் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்று இருந்துவரும் பதாஞ்சலி சாஸ்திரியார் அவர்கள்தான், தலைப்பில் கண்ட எவராலும் மறைக்க முடியாததும்—மறுக்க முடியாததுமான மகத்தான உண்மையை, மிகமிகத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் துணிந்துகூறி இருப்பவராவார்.

தென்னாட்டவருக்கு வடநாட்டவர் இழைத்துவரும் அவமரியாதையை ஒரு சாஸ்திரியாரா, அதிலும் பதாஞ்சலி சாஸ்திரியார் போன்ற ஒருவரா கூறுகிறார் எனக் கேள்விப்படும்பொழுது பெரும்பான்மையினருக்கு அதிர்ச்சியும், ஆச்சரியமும் ஏற்படவே செய்யும்.

சாஸ்திரியார், தனது வாழ்நாளில் ஒருநாளாவது தனித்த முறையில் அவமரியாதைப் புயலை அனுபவித்து அறியாதவர்.

அவரைப் பொறுத்தவரையில், தனிப்பட்ட முறையில் அவரை, வடநாட்டவர் பொருட்படுத்திப் பாராட்டி உள்ளனர்— புகழ்ந்துள்ளனர். டெல்லி ஏகாதிபத்தியம் சாஸ்திரியாரை உயர்நிலை வரைக்கும் ஏற்றி வைத்தும் இருக்கிறது.

இருந்தாலும், அதே சாஸ்திரியார்தான் கூறுகிறார், பொதுவாகத் தென்னாட்டவருக்கு வட நாட்டவர் இழைத்துவரும் அவமரியாதையைக் குறித்து!

சாஸ்திரியார் சாதாரண குடிமகன் அல்ல; அவசரப்பட்டு எதையும் உடனுக்குடன் கூறிவிடுவதற்கு.

அவரோ, பொறுப்பான தலைமை நீதிபதியாக இருந்து விலகியுள்ளவராவார்.

'தென்னாட்டவரை வடநாட்டவர் அலட்சியப்படுத்தி வருகின்றனர்; அவமதித்து வருகின்றனர்; வட நாட்டவர்பால் தென்னாட்டவர் காட்டும் அளவு மரியாதை அவர்கள் காட்டுவதில்லை,' என்ற கருத்தை, சாஸ்திரியார், ஒரே நாள் அனுபவத்தால் பெற்றுவிடவில்லை. இந்தியத் துணைக் கண்டம் முழுதும் பல ஆண்டுக்காலம் சுற்றி, கண்டறிந்த உண்மையைத்தான் சாஸ்திரியார் முடிவாக வெளியிட்டுள்ளார்.

அந்த உண்மை, சாஸ்திரியாரின் உள்ளத்தில் தாங்க முடியாத பெருஞ் சுமையாக இருந்து இருக்கிறது. அவர் உள்ளத்தை, அது சிரழித்து வந்திருக்கிறது. 'தாங்கினவரையில் போதும்; இனியும் பாரம் தாங்கமுடியாது' என்ற நிலை ஏற்பட்டதும் பதாஞ்சலி சாஸ்திரியார் அவர்கள் தென்னாட்டவர்பால் வடநாட்டவர் கொண்டுள்ள இழிந்த மனப்போக்கை இறுதியாக வெளிச் சமாக்கிவிட்டார்.

அப்பேருண்மையைக் கூற, மயிலை ரானடே நூல் நிலையத்தின் பொன்விழா, சாஸ்திரியாருக்கு ஒரு கிடைத்தற்கரிய வாய்ப்பாக அமைந்துவிட்டது அவரும் தாங்க முடியாமல் பல ஆண்டுகாலமாகத் தம் உள்ளத்திலேயே மறைத்து வைத்துக் கொண்டிருந்த மகத்தான உண்மையை, வெளியேஎடுத்து வீசிவிட்டார்!

சாஸ்திரியாரின் குமுறலுக்கு, வடநாட்டவரின் பாதந்தாங்கிகளாக உள்ள தென்னாட்டுத் 'திலகங்கள்' என்ன பதில் கூறப்போகின்றனவோ?

வடநாட்டுத் தலைவர்களின் திருக்கல்யாண குணத்தை வெளியில்கூற மனமின்றி இருந்துவிடாமல், காலங் கழித்தாவது கூறினமைக்காக பதாஞ்சலி சாஸ்திரியார் அவர்களை தென்னாட்டவர் பாராட்டுவர் என்பதில் ஐயமில்லை.

பட்டத்தின் பதட்டம்!

புதுடில்லி, நவ. 8—

திரு-கொச்சி முன்னாள் முதன் மந்திரியும், ம. சோ. கட்சித் தலைவருமான பட்டம் தாணு பிள்ளை டில்லி வந்து, பிரதமர் நேரு, பண்டித பந்த் ஆகியோரிடம் தமிழர்களிடத்தில் தனக்கு எத்தனை வெறுப்பு உண்டு என்பதைக் கொட்டிக் காட்டியிருக்கிறார்.

என்ன காரணத்தாலும் தென் திருவாங்கூர் தமிழ் தாலுகாக்களை தமிழ் நாட்டுடன் இணைக்கக் கூடாது என்று அவர் கோரினாராம்; ஆனல், அதே நேரத்தில், 'கூடலூர் கேரளத்துடன் இணைக்கப்படாதது அநியாயம்' என்று வாதாடினாராம்.

திரு-கொச்சியில் உள்ள தமிழ் தாலுகாக்களை சென்னையுடன் இணைப்பதினால் மிகுந்த தீமை விளையும் என்றும், நிர்வாகம் சீர்குலையும்—தொந்தரவுகள் அதிகமாகும் என்றும் அவர் தெரிவித்தாராம்.

தென் திருவாங்கூர் தமிழ் தாலுகாக்கள் சென்னைக்குச் செல்வதால், முக்கியமான ஆறுகள் தமிழ் நாட்டிற்குப் போய்விடும் என்றும், இதனால் கேரளத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்றும், இது அந்தப் பகுதிகள் சென்னையுடன் இணைவதால் வரும் பெருங் கேடுகளுள் ஒன்று என்றும் அவர் புலம்பினாராம்.

மேலும், கேரளம் பற்றிய மாநிலக் குழுவின் சிபாரிசு, மிக 'முரட்டுத்தனமானது' என்றும் அவர் கூறினாராம்.

'ஏற்றுமதி செய்யப்பட முடியாதது'

'நினைத்த மாத்திரத்தில் உருவாக்க இயலாதது'

'புரட்சி' குறித்து க்ருஷேவிச் கருத்து

ஆயுத பலத்தில் நிர்ப்பந்திப்பது ஏகாதிபத்தியக் கொள்கை என்கிறார்!

மாஸ்கோ, நவ. 7—

"பத்தொன்பதாம் நூற்றாண்டு— 'முதலாளித்துவ சகாப்த'மாயிருந்தது என்றால், இருபதாம் நூற்றாண்டு—'சோஷலிச கம்யூனிச சகாப்த'மாக இருக்கிறது"

"ஆனல் ஆய்ந்தறிந்த தேசீய சம்மதமான—'ஏற்றுமதி செய்ய முடியாத புரட்சி'யை ஆயுத பலத்தால் நிர்ப்பந்தித்து உருவாக்க எண்ணுவது, ஏகாதிபத்தியக் கொள்கைக்குச் சமமானதாகும்."

"எந்த ஒரு நாட்டிலும், நினைத்த மாத்திரத்தில் தங்கள் இஷ்டத்திற்கு புரட்சியை உருவாக்கிவிட முடியும் என்று எண்ணுபவர்கள், பைத்தியக்காரர்களாயிருப்பர்—என்று லெனின் கூறியிருப்பதைக் கண்ணுற வேண்டும்,"

என்று, சோவியத் முதல் உதவிப் பிரதமரான காகனேவிச், 38-வது புரட்சி தினக் கூட்டமொன்றில், கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களிடைப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"1917-ம் ஆண்டு ரஷ்யப் புரட்சியைக் காட்டிலும் மனித சமூகத்தின் எதிர்காலத்திற்கான வேறு ஒரு நல்ல சம்பவத்தை உலக சரித்திரம் காணவில்லை என்பது மிகையாகாது.

"ஆசிய நாடுகள் பலவற்றிற்கு சோவியத் யூனியன் தந்துவந்த மானசீகமான—உருவான ஆதரவின் விளைவாக, இரண்டாம் போருக்குப் பிறகு அந்நாடுகளுக்கு விடுதலை கிடைத்திருக்கிறது.

"மார்ஷல் புல்கானின், குருஷ்சேவ் ஆகியோர் இந்தியா பர்மா, ஆப்கனிஸ்தான் முதலிய நாடுகளுக்கு அண்மையில் சென்று வரவிருக்கின்றனர்; இதனால், அந்த ஆசிய நாடுகளுடன் சோவியத் யூனியனின் நட்பு பலப்படும் என்று நம்புகிறோம்."

ககனேவிச் பேசிய அந்தக் கூட்டத்தில், குருஷ்சேவ், புல்கானின் மற்றும் இதர சோவியத் தலைவர்களும் கலந்துகொண்டனராம்.

ரஷ்ய வெளிநாட்டுக் கொள்கை

அடிப்படை குறித்து மார்ஷல் ஜூகாவ் விளக்கம்

லண்டன், நவ. 7—

நவம்பர் புரட்சி தினம் இன்று மாஸ்கோவில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டதாம்.

செஞ்சதுக்கத்தில் மகத்தான இராணுவ அணிவகுப்பும், இதர நிகழ்ச்சிகளும் நடைபெற்றிருக்கின்றன. சோவியத் நாட்டுத் தலைவர்கள் பலரும் நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளனர்.

இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட பாதுகாப்பு மந்திரி மார்ஷல் ஜூகாவ் சோவியத் ரஷ்யாவின் வெளிவிவகாரக் கொள்கையின் அடிப்படை, லெனின் கற்பித்துச் சென்ற கொள்கையான—'சமாதானமாகக் கூடி வாழ்தலும், சமாதானத்திற்காகப் பாடுபடுதலும் தான்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், சோவியத் ரஷ்யாவின் கொள்கையினால்தான் ஜினீவா மாநாடு நடைபெற முடிந்தது என்றும், சோவியத் இராணுவத்தினர் தொடர்ந்து தேசிய நலன்களைப் பாதுகாப்பர் என்றும், குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தை முடித்துத் தந்த தொழிலாளர்கள், நிபுணர்கள், எஞ்சினீயர்கள் ஆகியோருக்கு நன்றி செலுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ரஷ்ய அரசாங்கம் பைபிள் அச்சிடுகிறது?

லண்டன், நவ. 7—

சோவியத் ரஷ்ய சர்க்கார் அச்சகம் சீக்கிரமே, கிறிஸ்துவ மத வேதப் புத்தகமான 'பைபிள்' பிரதிகளைப் புதிய பதிப்பாக அச்சிட்டு வெளியிடவிருப்பதாகத் தெரியவருகிறது.

புரட்சி நடைபெற்ற வெகு நாட்களுக்குப் பிறகு இப்போதுதான் இந்த வேத புத்தகங்கள் அச்சிடப்படுகின்றனவாம்.

இரண்டாம் யுத்த முடிவுக்குப் பின்னர், அமெரிக்க பைபிள் சங்கத்தினர் தயாரித்த வேதப் புத்தகங்கள் சில மட்டும் ரஷ்யாவுக்குள் அனுமதிக்கப்பட்டனவாம்.

புரட்சிக்கு முன்பாக, பெருவாரியாக 'பைபிள்' படிப்போரைக் கொண்ட நாடாகவே ரஷ்யா இருந்துவந்தது.

முதல் யுத்தத்திற்கு முன்பு ரஷ்யாவில் சுமார் 5 இலட்சம் பிரதிகள் ஆண்டொன்றுக்கு விற்பனையாகும்.

செஞ்சீனப் பெண்கள் முன்னேற்றம்

இந்திய தூதுக்குழுத் தலைவர் தரும் தகவல்

புதுடில்லி—

"சீனாவில் புதிய ஆட்சி ஏற்பட்ட பின்னர், வியக்கத்தக்க பெரும் முன்னேற்றம் அந்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது; பண்டைக் காலந்தொட்டு சீனாவின் சமுதாயச் சீரழிவுக்குக் காரணமாயிருந்தவைகளுள் ஒன்றான முறை தவறிய ஒழுக்கம் அங்கு அடியோடு மறைந்துவிட்டது. சமுதாயத் துறையிலும், வாழ்க்கையின் மற்றத் துறைகளிலும் பெண்கள் சிறந்த இடம் பெற்று விளங்குகின்றனர்,"

என்று, இந்தியாவிலிருந்து பீகிங் சென்று திரும்பிய இந்தியப் பல்கலைக் கழக மாணவர்கள்—பேராசிரியர்கள் தூதுக் குழுத் தலைவர் சி. பி. இராமசாமி (அய்யர்) குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார்:—

"சீன நாட்டிலுள்ள குழந்தைகள் அனைத்தையும் முறையாகப் பேணி வளர்க்கும் பொறுப்பை அந்நாட்டு அரசாங்கம் மேற்கொள்ளுவதே இதற்குரிய காரணமாகும். பெண்கள் முன்னேற்றத்திற்காகக் காட்டப்படும் அக்கறையும், அதற்காகச் செய்து தரப்படும் வசதிகளும் உலகில் வேறு எங்குமே இல்லை என்று கூறலாம்.

"பொதுவுடைமையர் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு, மீண்டும் சியாங்—கே—ஷேக்கின் ஆட்சி சீனாவில் ஏற்படுமென்று நம்புகிறவர்கள், வெறும் கற்பனை உலகில் வாழ்பவர்கள் மட்டுமல்ல—அவர்கள், அறியாமை உலகில் வாழ்பவர்களுமாவர்.

"தன்னுடைய நாட்டை தொழில் மயமாக்குவதில், செஞ்சீன அரசாங்கம் விரைந்து பெருத்த முயற்சி செய்து வருகிறது; ஆனல், முழு அளவில் நாடு தொழில் மயமாகும் காலம் வரையில், தன்னுடைய மனித சக்தியை சீனா நன்கு பயன்படுத்துகிறது."

ரூ. 400 கோடி செலவில் வடக்கில் நிறுவப்படும் 3 உருக்கு ஆலைகள்

விரைவிலேயே உற்பத்தியைத் துவங்குமாம்

எஞ்சினீயர்களும், தொழில் நுட்ப சிப்பந்திகளும் உடனடியாகத் தேவையென குழுவினர் வற்புறுத்தல்

புதுடில்லி—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வடநாட்டில் நிறுவப்பட இருக்கும் மூன்று புதிய ஆலைகளிலும், எதிர்பார்த்ததைவிட விரைவிலேயே உற்பத்தி தொடங்கிவிடக்கூடுமாம்.

இதனால், தொழில் நுட்ப சிப்பந்திகளை வேலைக்குச் சேர்ப்பதற்கும், பயிற்சியளிப்பதற்கும் தற்போதுள்ள ஏற்பாடு முற்றிலும் போதாது என்றும், ஆகவே, விரிவான அடிப்படையில் உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்குத் திட்டம் தயாரிப்பதற்கு உடனடியாக உயர் அதிகாரக் குழு ஒன்றை நியமிக்குமாறும் ரஷ்யா சென்று திரும்பியுள்ள இந்திய உருக்குக் குழுவினர், மத்திய ஆட்சியினரிடம் தந்துள்ள அறிக்கையில் வற்புறுத்தியுள்ளனர்.

ரஷ்ய உதவியுடன், மத்தியப் பிரதேசத்தில் 'பிலாய்' என்ற இடத்தில் ஏற்படுத்தப்படவிருக்கும் உருக்கு ஆலைக்கு மட்டும் 1956-ம் ஆண்டு ஆரம்பத்திற்குள் குறைந்தபட்சம் 130 எஞ்சினீயர்களும்—தொழில் நுட்ப சிப்பந்திகளும், தேர்ச்சியடைந்த 300 தொழிலாளர்களும் தேவையெனக் குழுவினர் கருத்தறிவித்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் உருக்கு உற்பத்தி முறை, பல நாடுகளில் இருப்பதைவிட மிகவும் முன்னேற்றம் அடைந்திருப்பதாகவும், அவர்களின் தளவாடங்களும் மற்ற நாடுகளின் 'தர'த்திற்குக் குறைந்ததாக இல்லையென்றும், தோற்றம் பகட்டாக இல்லையென்றாலும் உற்பத்திக்கும்—தோற்றத்துக்கும் சம்மந்தம் கிடையாதென்றும். அன்றியும், ரஷ்ய இயந்திரங்களைப் பராமரிப்பது சிக்கனமானதாகவும் இருக்கிறதென்றும் இந்தியக் குழுவினர் தெரிவித்துள்ளனராம்.

மூன்று ஆலைகள்—அதிகாரிகள் நம்பிக்கை

ஜெர்மன் நிறுவனமொன்றின் உதவியுடன் ரூர்கேலாவிலும், பிலாயில் ரஷ்யாவும், துர்காபூரில் பிரிட்டனும் ஏற்படுத்தும் மூன்று இரும்பு—உருக்கு ஆலைகளிலும் ஏறக்குறைய ஏககாலத்தில், திட்டமிடப்பட்டதற்கு முன்கூட்டியே—1959-ம் ஆண்டு துவக்கத்திலேயே உற்பத்தி ஆரம்பமாகிவிடுமென்று அதிகாரிகள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

மூன்று ஆலைக்குமாக மொத்தத்தில் ரூ. 400 கோடி செலவாகும்; ஒவ்வொரு ஆலையும் ஆண்டிற்கு 10 இலட்சம் டன் உருக்கு உற்பத்தி செய்யும்.

நாட்டின் இப்போதைய உருக்குத் தேவை 35 இலட்சம் டன்களாகும். பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதால், பொது—தனித் துறைகளின் மூலம் மொத்தமாக எதிர்பார்க்கப்படும் 45 இலட்சம் டன் உருக்கு உற்பத்தியும் நாட்டின் தேவைக்கே சரியாக இருக்கும்; மிச்சமிருக்காது.

மூன்று உருக்கு ஆலைகளிலும் உற்பத்தி தொடங்கிவிட்டால், ஆண்டுதோறும் ரூ 200 கோடிக்கு அந்நியச் செலாவணி மிச்சமாகக் கூடுமாம்; அன்றியும், மலிவான விலைக்கு மக்களுக்கு உருக்குக் கிடைக்குமாம்.

இறக்குமதி உருக்கின் விலை ரூ. 600; ஆனல் உள்நாட்டு உற்பத்தி விலை ரூ. 400-ஆகத்தானிருக்குமாம்.

இந்தியாவுக்குக் கானடா உதவி!

புதுடில்லி, நவ 5—

'இந்தியா, பாகிஸ்தான் வெள்ள நிவாரணத்துக்கு 1 இலட்சம் டாலர் கானடா உதவும்' என்று, கானடா வெளிநாட்டு அமைச்சர் குறிப்பிட்டுவிட்டு, இந்தியாவின் மூன்று புதிய திட்டங்களுக்கும் உதவுமென்றும் கூறியுள்ளார். அத்திட்டங்கள் இங்கு தரப்படுகிறது:—

1. கிராமாந்திரங்களுக்கு மின்சாரம் விநியோகம் செய்வதற்குரிய 30 இலட்சம் டாலர் பெறுமானமுள்ள மின்சார உற்பத்தி இயந்திரங்கள் தரப்படும்.

2 கனிவளங்களை—குறிப்பாக இராஜஸ்தானில் பெட்ரோல் இருக்குமிடங்களைக் கண்டுபிடிப்பதற்கு விமான 'சர்வே' செய்வதற்கு உதவப்படும்.

3. பயிர்களில் பூச்சி விழுவதைத் தடுப்பதற்கு இரு விமானங்கள் தரப்படும்.

அணு உலை ஏற்படுத்த உதவி செய்யப்படுமாம்!

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில், இந்தியாவில் அணு உலை ஏற்படுத்தும் வேலை துவங்கி விடுமென்றும், இந்நாட்டின் தட்பவெப்ப நிலைமைக்குத் தக்கவாறு அந்த அணு உலை நவீன முறையில் நிறுவப்படுமென்றும், ஆசியாவிலேயே இது தான் முதல் அணு உலையாக இருக்குமென்றும் கானடா வெளிநாட்டு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆந்திர சர்க்கார் நிலைமை என்ன?

எல்லைத் தகராறுகள் பற்றி ஒரு தகவல்

"இப்போதுள்ள நிலைமையில் நேர்முகமான பேச்சுவார்த்தைகளின் மூலம் ஆந்திரா-சென்னை எல்லைப் பிரச்சினையைத் தீர்க்க முடியாதென்று தோன்றுகிறது. ஆகவே, ஆந்திரா-சென்னை எல்லை பற்றிய எல்லாப் பிரச்சினைகளையுமே எல்லை கமிஷனின் பரிசீலனைக்கு விடவேண்டுமென்றே ஆந்திர சர்க்கார் முடிவு செய்யக்கூடும்" என்று மந்திரி சபை பிரமுகர் ஒருவர் கூறியுள்ளதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

ஒசூரைப் பற்றித்தான், சென்னையில நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் சிக்கல் ஏற்பட்டதென்பது நினைவிருக்கக்கூடும்.

இம்மாதிரி இரு மொழிகள் பேசும் பகுதிகளில் எந்த மொழி அதிகம் பேசப்படுகிறதோ, அந்த மாநிலத்துடன் அந்தப் பகுதியைச் சேர்க்க வேண்டுமென்று ஆந்திரப் பிரதிநிதிகள் சொன்னார்கள்; சென்னை சர்க்கார் அதற்கு சம்மதிக்கவில்லை.

"சித்தூர் மாவட்டத்திலுள்ள இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்களின் நலன்களைப் புறக்கணிக்க முடியாதென்று சென்னை சர்க்கார் கருதுகிறது. அதைப்போலவே, ஒசூரிலுள்ள தெலுங்கர்களின் கோரிக்கையையும் ஆந்திர சர்க்கார் கவனிக்கத்தான் வேண்டும்; ஒசூரை மட்டும் எல்லைக் கமிஷனுக்கு அனுப்புவதற்குப் பதிலாக, எல்லை பற்றிய எல்லாத் தகராறுகளையுமே கமிஷனுக்கு அனுப்பிவிடலாமென ஆந்திர சர்க்கார் கருதுகிறது. இதனல், தம்முடைய நலன்கள் பாரபட்சமற்ற ஒரு கமிஷனல் பரிசீலிக்கப்படுகிறது என்ற திருப்தி மக்களுக்கு ஏற்படும்" என்றும் அந்தப் பிரமுகர் சொன்னராம்.

இந்தியாவில் துணி உற்பத்தி

கண்காட்சி தரும் விளக்கம்

புதுடில்லி, நவ. 7—

உலகிலேயே துணி உற்பத்தியில் முதல் இடம் பெறுவது அமெரிக்கா என்றும், இரண்டாவது இடம் பெறுவது இந்தியா என்றும் டில்லியில் நடைபெறும் இந்தியத் தொழில் கண்காட்சியில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 461 துணி உற்பத்தி ஆலைகள் இருக்கின்றன. இவற்றில் ஆண்டுதோறும் ரூ. 335 கோடி பெறுமான துணி உற்பத்தியாகிறது. இது, இந்தியாவின் மொத்த தொழில் உற்பத்தியில் சுமார் 33 சத விகிதமாகும்.

துணி உற்பத்திக்கு ரூ. 11 கோடி பெறுமான எரிபொருள், மின்சாரம், இதர எண்ணெய்ப் பொருள்கள் தேவைப்படுகின்றன; மற்றும், ரூ. 26 கோடி பெறுமான சாயங்கள், இதர பொருள்கள் தேவைப்படுகின்றன.

துணி உற்பத்தித் தொழில், மாநில, மத்திய சர்க்கார்களுக்கு ஆண்டுதோறும் ரூ. 40 கோடி வரி செலுத்துகின்றது.

நன்கு நிர்வகிக்கப்படும் தொழில்களில், இந்தத் துணி உற்பத்தி தான் அதிகமான பேர்களுக்கு வேலை தருகிறது. இத்தொழிலில் சுமார் 7½ இலட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இத்தொழிலில் ஈடுபட்டிருப்போருக்கு ரூ. 80 கோடிக்கும் அதிகமாக ஊதியம் தரப்படுகிறது.

1904-ல், சுமார் 50 இலட்சம் கதிர்கள் இருந்தன; இன்று 1,14,25,000 கதிர்கள் உள்ளன.

விசைத் தறிகளின் எண்ணிக்கையும் 42,663-லிருந்து 2,04,012 ஆக கடந்த 50 ஆண்டுகளில் உயர்ந்துள்ளது.

ஆண்டுதோறும் சராசரி உற்பத்தி 1904-ல் 43.4 கோடி கெஜமாக இருந்தது இப்போது 500 கோடி கெஜமாக உயர்ந்துள்ளது.

இறக்குமதி கடந்த 50 ஆண்டுகளில் 180.6 கோடி கெஜத்திலிருந்து 60 இலட்சம் கெஜமாகக் குறைந்துள்ளது; ஆனல், ஏற்றுமதி இந்த அரை நூற்றாண்டில் 16.8 கோடியாக இருந்தது, 79.2 கோடி கெஜமாக உயர்ந்துள்ளது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 1955—56-க்குள் 470 கோடி கெஜம் துணி உற்பத்திச் செய்ய வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருந்தது; ஆனல், 1954-ம் ஆண்டிலேயே இந்த இலட்சிய எல்லை மிஞ்சிவிட்டது. 502.5 கோடி கெஜம் அந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுமையிலும் 25 இலட்சம் தொழிலாளர் நன்மையடைவராம்!

தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் திட்டம்பற்றி அமைச்சர்

சென்னை, நவ. 7—

நவ. 14-ந் தேதியன்று சென்னை வட்டார அரசாங்கத் தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை குடியரசுத் தலைவர் இரசேந்திரர் துவக்கிவைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றனவாம்.

"அரசாங்கத் தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின் கீழ், 10 இலட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கொண்டு வரப்படுவார்கள்,"

என்று, மத்திய சர்க்கார் தொழிலாளர் உதவி மந்திரி அபித் அலி கூறியுள்ளார்.

"மருத்துவ மனைகள் மற்றும் வசதிகளுக்குக் கட்டிடங்கள், நிதி வசதி முதலியன இல்லாதபடியால் இத்திட்டத்தை 1956-ம் வருடம் முடிவதற்குமுன் தொழிலாளர் குடும்பங்களுக்கு பரவலாக்குவதற்கு இல்லை" என்று அவர் கூறினர். ஆனல், 2-வது திட்டத்தின் கீழ் இது அமுல் நடத்தப்படும் என்று தெரிவித்தார்.

சென்னை மாநிலத்தில் மதுரை, சேலம், திருச்சியில் அடுத்தபடியாக இத்திட்டம் அமுல் நடத்தப்படும் என்றும், அடுத்த வருட முடிவிற்குள் மாநிலத்தின் மற்றப் பகுதிகளுக்கும் பரவலாக்கப்படும் என்றும் கூறினர்.

இத்திட்டத்தினுல், நாடு முழுமையிலும் 25 இலட்சம் தொழிலாளர்கள் முதல் திட்டம் முடிவடையும் முன்பு நன்மை பெறுவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொழில் துறைக்குப் புறம்பான கடைச் சிப்பந்திகள், வியாபார, பாங்கி ஊழியர்களுக்கும், அவர்கள் குடும்பத்திற்கும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இத்திட்டத்தைப் பரவலாக்கும் உத்தேசம் இருக்கிறது என்றும், 4 கோடி பேருக்கு மேல் இதன் பலனைப் பெறுவார்கள் என்றும் தெரிவித்தார்.

[குமாஸ்தாக்கள், மேல்-பார்வையாளர் உள்பட 20 பேருக்குக் குறையாமல் வேலை செய்பவையும், விசை உபயோகிப்பவையுமான தொழிற்சாலைகள்தான் இப்பொழுது இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுகின்றன.]

ஒரு மைலுக்கு ஒரு ரூபாய் சம்பாதிக்கின்றன!

தேசீய மயமான திரு - கொச்சி போக்குவரத்து பஸ்கள்

திருவனந்தபுரம், நவ. 8—

தேசீய மயமாக்கப்பட்ட திரு—கொச்சி போக்குவரத்து பஸ்கள், இன்று சுமார் தினம் 45,000 மைல்கள் ஓடுகின்றன.

ஒரு மைலுக்கு ஒரு ரூபாய் வீதம் சம்பாதிப்பதுடன், சுமார் 4,200 பேர்களுக்கு வேலையும் தருகின்றன.

17 ஆண்டுகளுக்கு முன் 35 வண்டிகள் மட்டும் மாநிலத்தின் தென்பகுதியில் ஒரு 70 மைல் நீள சாலையில் மட்டும் ஏகபோகமாக ஓடிக் கொண்டிருந்தன; இன்று அவை, 630 மைல்—தெற்கே குமரி முனை முதல் வடக்கே ஷோரனூர் வரை ஓடுகின்றன.

வண்டியில் பிரயாணிகளிடமிருந்து சாதாரணப் போக்குவரத்திற்கு மைல் ஒன்றிற்கு அரையணு வீதமும், 'எக்ஸ்பிரஸ்' போக்குவரத்திற்கு முக்காலணு வீதமும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

சாமான்கள் போக்கு-வரத்தை தேசீயமயமாக்க இதுவரையில் முயற்சிக்கப்படவில்லை; என்றாலும், ஒரு பார்சல் போக்கு-வரத்து மட்டும் தேசீயமயமாக்கப்பட்ட எல்லா வழிகளிலும்—இதர பொது, தனிப்பட்ட போக்கு-வரத்திற்குக் குந்தகம் இன்றி செயல்பட்டுவருகிறது.

எவருமறியாமல் இந்தியா வரும் அரச குடும்பத்தினர்

புதுடில்லி, நவ. 7—

பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது முதன் முறையாக, இந்தியாவிற்கு சில அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், எவருக்கும் தெரியாமல் வருகை தரவிருக்கின்றனராம்!

இத்திங்களில் அவர்கள் பம்பாய் வந்து சேருவார்கள் என்று கூறப்படுகிறது.

அவர்களது வருகை இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. எந்த தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தெரிவிக்கக்கூட அதிகாரிகள் மறுத்துவிட்டனராம். பாதுகாப்புக் காரணங்களுக்காக, அவர்கள் எங்கெங்கு செல்வார்கள் என்ற விபரங்களும் தரப்படமாட்டாது; ஆனல், ஒரு அரச குடும்பத்திற்குத் தரவேண்டிய எல்லா உரிமைகளும், சலுகைகளும் அவர்களுக்குத் தரப்படும். அவர்களுக்கான பொது நிகழ்ச்சிகள் மட்டும் இராது என்றும் கூறப்படுகிறது.

இப்போது டில்லியில் நடைபெற்றுவருகிற இந்தியத் தொழில்கள் கண்காட்சி, இந்தியத் தொழில்களையும், அயல்நாட்டுத் தொழில்களையும், சிறிய கைத் தொழில்களையும், பெரிய கைத் தொழில்களையும் காணுவதற்கு ஈடு இணையற்ற ஒரு வாய்ப்பை அளித்துள்ளது. சர்வதேச ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி சுமார் 73 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டிருக்கிறது; காட்சிப் பொருள்கள் மட்டும் சுமார் 10 இலட்சம் சதுர அடி பரப்பளவில் வைக்கப்பட்டிருக்கின்றன.

நிலக்கரி தொழில்

இயந்திர மயமாக்குதல்பற்றி இந்திய சர்க்கார் முடிவு

புதுடில்லி, நவ. 7—

தொழிலாளர் பிரச்சினை, மற்ற பிரச்சினைகள் ஆகியவைகளை உத்தேசித்து, நிலக்கரித் தொழிலை இயந்திர மயமாக்குவதை கூடிய மட்டில், புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் நிலக்கரிச் சுரங்கங்களுக்கு மட்டுமே மேற்கொள்ள வேண்டுமென இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளதாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், அநேகப்படியாக 330 இலட்சம் டன் நிலக்கரி உற்பத்தி செய்வதற்குத் துவக்கப்படும் சுரங்கங்களுக்கு அதை உட்படுத்தி வைக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த உற்பத்தியில் 80 இலட்சம் டன் தனிப்பட்டவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை எந்த முறையில் கையாள வேண்டும் என்பதுபற்றி தனிப்பட்ட நிலக்கரிச் சுரங்க முதலாளிகளின் பிரதிநிதிகளுடன் இன்னும் மூன்று வாரங்களுக்குள் விவாதம் நடத்தப்படக்கூடுமாம்.

மத்திய ஆட்சியினர் திருப்தி அடைந்தனர்?

புதுடில்லி, நவ. 6—

இந்தியாவில், அந்நியர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிறுவனங்களில், உத்தியோகங்களை இந்தியர் மயமாக்குவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து மத்திய ஆட்சியினருக்கு மன நிறைவு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

'இந்தியர்களுக்கு வேலை தேடித் தருவதற்காக அந்நிய நாட்டினர் வெளியேற்றப்படுகின்றனர்' என்ற எண்ணம் ஏற்படுவதற்கு சர்க்கார் விரும்பாததால், சில நாடுகளில் செய்யப்பட்டுள்ளதுபோல, இந்தியர் மயமாக்குவது சம்பந்தமாகச் சட்டம் எதுவும் இயற்றுவது அவசியமெனக் கருதப்படவில்லையாம்.

அந்நிய நிறுவனங்களில் பணியாற்றும் இந்தியர் தொகை 1947ம் ஆண்டில் 6,162 ஆக இருந்துள்ளது; ஆனல், 1955ம் ஆண்டில், அத்தொகை 21,242 ஆக உயர்ந்துள்ளது. இதே காலத்தில் அந்நியர் தொகை 7,623-லிருந்து 7,526 ஆகக் குறைந்துள்ளது. உயர்ந்த சம்பளங்கள் வாங்கும் உத்தியோகங்களிலும் இந்தியர் தொகை திருப்திகரமான அளவுக்கு உயர்ந்துள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க-சீன சமாதானபேச்சுக்கள்

சியாங்கிற்குத் தரும் ஆதரவை அமெரிக்கா நிறுத்தாதாம்!

வாஷிங்டன், நவ. 8

உலக விவகாரங்களில், பலாத்காரத்தைக் கொள்கையாகக் கொள்வதில்லை என்று சீனா அறிவிப்பதில், பார்மோசா சிக்கலும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று அமெரிக்கா கோரியிருப்பதாகத் தெரியவருகிறது.

ஜினிவாவில் சீன—அமெரிக்க சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் சீனத் தூதுவர், 'அமெரிக்காவும்—சீனாவும் சேர்ந்து கூட்டாக பலாத்காரம் உபயோகிப்பதில்லை' என்று அறிக்கை வெளியிட வேண்டும் என்று யோசனை தெரிவித்திருந்தார்.

இந்த யோசனையின்படி, சீனாவுக்கு அமெரிக்கா இரண்டு விஷயங்களில் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

1. பார்மோசாவில் உள்ள சியாங்-கே-ஷேக்கிற்குத் தரப்படும் எல்லா வகையான ஆதரவுகளையும் அமெரிக்கா திரும்பப் பெற வேண்டும்;

2 பிரதான சீனா மீது விதிக்கப்பட்டுள்ள ஐ. நா. வர்த்தக முட்டுக்கட்டையை நீக்கவேண்டும்—என்பவையே அவை இரண்டும்.

அமெரிக்கப் பிரதிநிதி, பார்மோசா மீது செஞ்சீனா கொண்டாடிவரும் பாத்தியதையை விட்டுவிடத் தேவையில்லை என்றும் ஆனால், அமெரிக்க—சீன நெருக்கடிகளைத் தளர்த்துவதற்கு முதற்படியாக அமையும்—பலாத்காரம் உபயோகிப்பதில்லை—என்ற அறிவிப்பில் பார்மோசாவும் இடம்பெற வேண்டுவது அவசியமான ஒன்று என்றும் தெரிவித்திருக்கிறாராம்.

ஆனாலும், எந்தக் காரணத்தினாலும், சியாங்-கே-ஷேக்கிற்கு அமெரிக்கா தந்து வரும் ஆதரவுகளில் (பொருளாதார, இராணுவ உதவி போன்ற) எவற்றையும் திரும்பப் பெற்றுக் கொள்ளுவது சாத்தியமல்ல என்றும் கூறப்படுகிறதாம்.

வர்த்தக முட்டுக்கட்டையை நீக்குவது பற்றி, அமெரிக்க அரசாங்க மந்திரி டல்லசும், சீனப் பிரதமர் சௌ-என்-லாயும் சந்திக்கும்போது பேசித் தீர்த்துக் கொள்ளுவதுதான் முறை என்றும் கூறப்படுகிறது.

எகிப்து-இஸ்ரேல் தகராறு

மார்ஷல் டிட்டோ மத்தியஸ்தம் செய்துவைப்பார்

நியூயார்க், நவ. 8—

அராபிய நாடுகளுக்கும்—யூத நாடான இஸ்ரேலுக்கும் இடையேயுள்ள தகராறுகள், கடந்த கிழமை இறுதியில், இஸ்ரேல்—எகிப்து எல்லையில் ஏற்பட்ட சண்டைகளினால் உச்சம் பெற்றிருப்பதும், இந்த எல்லையோரத் தாக்குதல்கள் ஒரு பெரும் யுத்தமாக வடிவெடுக்கக்கூடிய அபாயத்தை உடையன என்பதும் யாவருமறிந்ததே.

இந்தோ-சீனாவில் போர் நிறுத்தம் ஏற்பட்ட பிறகு பெரும் 'தலைவலி' தரும் சிக்கலாக இஸ்ரேல் அராபிய தகராறு உருவெடுத்துள்ளது.

அண்மையில் யூகோ தலைவரான மார்ஷல் டிட்டோவை, அமெரிக்க அரசாங்க மந்திரி டல்லஸ் சந்தித்த பின்பு, மார்ஷல் டிட்டோ, மத்திய கிழக்கில் புகைந்து கொண்டிருக்கும் இந்தத் தகராறைத் தீர்த்து வைப்பதற்கு 'மத்தியஸ்தராக' அனுப்பப்படலாம் என்று அரசியல் பார்வையாளர்கள் கருத்தறிவிக்கின்றனர்.

மார்ஷல் டிட்டோ அண்மையில் எகிப்து பிரதமரைச் சந்திப்பார் என்று ஏற்கனவே வெளிவந்த செய்தியும் இதற்கு ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது.

★

இஸ்ரேல் - எகிப்து எல்லையில்

புதிய தாக்குதல்!

ஜெருசலேம், நவ. 8—

இஸ்ரேல்—எகிப்து எல்லையில் உள்ள எலாத் என்ற செங்கடல் துறைமுக நகர் பகுதியில் எகிப்து இராணுவத்தினர், இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

இந்தப் பகுதியில் இதுதான் முதலாவதாக நடைபெற்ற தாக்குதல் என்று கூறப்படுகிறது.

எகிப்து இராணுவத்தினர் இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்ததாயும், ஆனால், திரும்பத் தாக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டதாயும் அந்த இஸ்ரேல் அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

ஆனால், கெய்ரோவிலிருந்து அதிகாரபூர்வமாக இது குறித்து நேர்முரணான தகவல் தரப்படுகிறது.

எகிப்திய எல்லைக்குள் இஸ்ரேலியர் புகுந்து தாக்க முயன்றதாயும், அதனை எதிர்த்து முறியடிக்க எகிப்து தாக்குதல் நடத்தியதாகவும், இதனால் நான்கு இஸ்ரேலியர் கொல்லப்பட்டதுடன் எட்டுப் பேர் காயம்பட்டனர் என்றும், இஸ்ரேலிய இராணுவத்தினர் அவர்கள் எல்லைக்குள் திருப்ப அனுப்பப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இந்திய வெங்காயம்

இலங்கையில் இறக்குமதித் தடை

தளர்த்தப்படவில்லை என அறிவிப்பு

கொழும்பு, நவ. 8—

இந்தியா உட்பட வேறு எங்கிருந்தும், இலங்கையில் வெங்காய இறக்குமதிக்கு சர்க்கார் விதித்துள்ள தடை நீடிக்கும் என்றும், அண்மையில் அந்தக் கொள்கையில் மாறுதல் ஏற்பட நியாயமில்லை என்றும், உள்நாட்டிலேயே வெங்காய விளைச்சல் அதிகரித்திருப்பதே இதற்குக் காரணம் என்றும் உணவிலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

3,000 டன் வெங்காயம் இறக்குமதி செய்துகொள்ள இலங்கை சர்க்கார் அனுமதி வழங்கியிருப்பதாகசென்னையிலிருந்துவந்தசெய்தி இலங்கை வானொலி மூலம் ஒலி பரப்பட்டது என்றும், அதனால் உள்நாட்டு வியாபாரிகள் பெருங்குழப்பமடைந்தனர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்து. அதற்கு மறுப்பாகவே 'இறக்குமதிக் கொள்கைகளில் மாறுதல் இல்லை' என்று தெரிவித்திருக்கிறார்.

24,299 அடி உயர மலைச் சிகரம்

எட்டிப் பிடித்துத் திரும்புகையில் சறுக்கிவிழுந்து ஒருவர் மரணம்

ஜினீவா, நவ. 8—

இமயமலைச் சிகரங்களில் ஒன்றான 'கணேஷ் இமால்' என்ற 24,299 அடி உயரச் சிகரத்தை பிரெஞ்சு — சுவிஸ் மலையேறுங் குழு ஒன்று எட்டிப் பிடித்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. ஆனால் கடந்த அக்டோபர் 24-ந் தேதியன்று சிகரத்தை எட்டிப் பிடித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருக்கையில் குழுவைச் சேர்ந்த எரிக் கௌசக் என்பவர் சறுக்கி விழுந்து இறந்துவிட்டதாகத் தெரிகிறது.

சிகரத்தை எட்டிப் பிடித்த குழுவில், பெண்மணி ஒருவரும் இருந்தார் என்று கூறப்படுகிறது.

அருணாசலம் நினைவு மன்றத் துவக்க விழா

★

13—11—55 மாலை 6 மணிக்கு எலப்பாக்கம் கிராமத்தில், தோழர் இரா. வெங்கடேசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், முகவை ஆர். எஸ். பாண்டியன், கே.டி.எஸ்.மணி ஆகியோர் பேசுவர்.

பெங்களூர் மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகட்கு

"13-11-55 மாலை 4 மணிக்கு, பெங்களூர் மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம், ஸ்ரீராமபுரம் கிளைக் கழக மனையில் நடைபெறும். அதுபோது, எல்லா கிளைக் கழகச் செயலாளர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள வேண்டுமாய் கோருகிறேன்,"

என்று, பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ் வி. பதி அறிவிக்கிறார்.

மதுரையில் கி. மனோகரன் சொற்பொழிவுகள்

11—11—55 மாலை 4 மணிக்கு மதுரை தியாகராசர் கல்லூரியிலும், மாலை 6 மணிக்கு, அமெரிக்கன் கல்லூரியிலும் தோழர் கி மனோகரன் சொற்பொழிவாற்றுவார்.

12—11—55 மாலை 6 மணிக்கு மதுரை-அண்ணா நிலையில், தி. மா. மு. கழக நகரக் கிளையின் நான்காவது ஆண்டுத் துவக்க விழா நடைபெறும். தோழர்கள் கி. மனோகரன், எஸ் முத்து, மா. பாண்டியன், கு. கிருட்டிணன் ஆகியோர் பேசுவர்.

சிறப்புச் சொற்பொழிவு

10-11-55 மாலை 4-30 மணிக்கு: சென்னை—லாயோலா கல்லூரித் தமிழ்ப் பேரவையின் சார்பில், குவின் மண்டபத்தில் சிறப்புக் கூட்டம் நடைபெறும். தோழர் க. அன்பழகன் சொற்பொழிவாற்றுவார்.

சொற் பயிற்சிக் கூட்டம்

10-11-55 மாலை 6-30 மணிக்கு, சென்னை திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகப் பணிமனையில் (8-வது வட்டம்-எண் 10, லாயர் சின்னத்தம்பி முதலி தெரு) தோழர் ம. நடராசன் தலைமையில் நடைபெறும். 'மொழிப் போராட்டம் ஏன்?' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

பக்தூனிஸ்தான் சிக்கல்

ஆப்கன் 'பிரமுகர்கள் சபை' விவாதிக்கும்

கராச்சி, நவ. 8—

ஆப்கனிஸ்தான் 'மூத்தோர் சபை' என்றழைக்கப்படும் 'பிரமுகர்கள் சபை'யை, நவ. 13-ந்தேதியன்று மன்னரான ஜாகிர்ஷா கூட்டியிருக்கிறார்.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது, யுத்தம் குறித்து ஆப்கன் கொள்கையை வகுப்பதற்காக இந்தச் சபை கூடிய பிறகு இப்போதுதான் முதன் முதலாகக் கூடுகிறது இப்போது, இச்சபை பக்தூனிஸ்தான் சிக்கல் குறித்து விவாதிப்பதற்காகக் கூடுகிறதாம்.

பாக். சர்க்கார் வட்டாரங்கள், ஆப்கன் மன்னரின் சபையைக் கூட்டுகிற இந்த நடவடிக்கையை ஒரு அரசியல் 'ஸ்டண்ட்'—என்று வர்ணிக்கின்றனவாம்!

என்றாலும், இங்குள்ள வெளிநாட்டு அரசியல் வட்டாரங்கள், சபையின் நடவடிக்கையைக் கூர்ந்து கவனிக்கப்போவதாகத் தெரிவித்திருக்கின்றனவாம்.

புஷ்து மொழி பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமைக் கோரிக்கைதான் பக்தூனிஸ்தான்

வட நாட்டில் மேலும் ஆறு ஆராய்ச்சி நிலையங்கள்

கல்கத்தா, நவ 6—

சணல் ஆராய்ச்சி, மற்றும் அபிவிருத்திக்காக ஆறு நிலையங்களை, சணல் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் திறப்பதற்கு இந்திய சர்க்கார் முடிவு மேற்கொண்டிருக்கின்றனர்.

இரண்டு மேற்கு வங்கத்திலும், அசாம், பீகார், ஒரிசா, உத்திர பிரதேசம் ஆகியவற்றில் ஒவ்வொன்றுமாக அந்த நிலையங்கள் அமையும்.

ஏற்கனவே, பாரக்பூரிலும், கல்கத்தாவிலும் இத்தகு ஆராய்ச்சி நிலையங்கள் இரண்டு இருந்து வருகின்றன.

காஷ்மீர் சிக்கல்

மீண்டும் ஐ. நா. சபைக்கு பாக். எடுத்துச் செல்லும்?

நட்புறவு நாடுகளின் நிலைமையை அறிவதற்குக் கராச்சி முயற்சி

கராச்சி, நவ. 8—

இங்கு இரண்டு நாள் தங்கிச் செல்ல வந்துள்ள கனடா வெளிவிவகார இலாகா மந்திரியான லெஸ்டர் பியர்சனுடன், பாகிஸ்தான் சர்க்கார் காஷ்மீர் விவகாரம் குறித்து விவாதிக்கும் என்றும், மீண்டும் ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு இந்த விவகாரத்தை பாகிஸ்தான் எடுத்துச் சென்றால் கனடாவின் நிலை என்னவாயிருக்கும் என்று தெரிந்துகொள்ள பாகிஸ்தான் விரும்புவதாயும் கூறப்படுகிறது.

ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு மீண்டும் காஷ்மீர் விவகாரம் பாகிஸ்தானால் எடுத்துச் செல்லப்படுமாயின், தங்கள் தங்கள் நிலை என்ன என்பதைத் தெரிவிக்குமாறு மிகச் சமீப காலத்தில் தன்னுடன் நட்புறவு கொண்ட நாடுகளுடன் பாகிஸ்தான் கேட்டுவருவதாயும் அரசியல் பார்வையாளர்கள் தகவல் அறிவிக்கின்றனர்.

பியர்சனுடன், அண்மையில் பாகிஸ்தான்—ஆப்கன் நாடுகளிடையே எழுந்துள்ள சிக்கல்கள் குறித்தும் பாகிஸ்தான் விவாதிக்குமாம்.

காஷ்மீர் பற்றிய பேச்சுவார்த்தைகளை மாநாட்டிற்குப் பின்பு நடத்துமாறு, இந்தியப் பிரதமரை பாக் பிரதமர் கோருவாரென நம்பப்படுகிறதாம்.

ரூ. 47 கோடி செலவில்

துறைமுகங்கள் அபிவிருத்தி

விசாகை, நவ. 8—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்தியாவில் உள்ள எல்லாப் பெரிய துறைமுகங்களையும் ரூ. 47 கோடி செலவில் அபிவிருத்தி செய்வது என்று தேசியத் துறைமுக 'போர்டு,' கூட்டத்தில் முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

சிறிய துறைமுகங்களையும் சுமார் ரூ 5 கோடி செலவில் அபிவிருத்தி செய்வது எனவும் கூட்டத்தில் முடிவாகியதாம்.

இரயில்வே இலாகா உதவி மந்திரி ஓ வி. அளகேசன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கியிருக்கிறார்.

சிறிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்யும் வேலை குறித்து ஆராய்வதற்காக, ஒரு நுணுக்கக் குழுவை 'போர்டு' நியமித்திருக்கிறது.

விசாகை, கண்டலா, திரு-கொச்சி துறைமுகங்களை உடனடியாக அபிவிருத்தி செய்வதற்கு இந்தியப் பேரரசு வழிவகை கண்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

விசாகைத் துறைமுகம், இரயில்வே இலாகாவிடமிருந்து போக்குவரத்து இலாகாவின் பொறுப்புக்கு மாற்றப்படும் என்றும் கூறப்படுகிறது.

இன ஒதுக்கலுக்குப் புதிய வழி!

தென்னாப்பிரிக்க சர்க்காரின் போக்கு

ஜோஹனஸ்பர்க், நவ. 7—

இங்கு வாழ்கிற இந்தியர்களை அவர்கள் இப்போது வசித்துவரும் வீடுகளிலிருந்து கிளப்பி 22 மைல் தொலைவில் உள்ள லெனேஷியா என்ற ஊரில் குடியேற்ற தென்னாப்பிரிக்க சர்க்கார் திட்டமிடுவதாகத் தெரிய வருகிறது.

தென்னாப்பிரிக்க இன ஒதுக்கல் சட்டப்படி இந்தியர்களை மட்டும் தனியாக ஒதுக்கிவைக்க லெனேஷியாவில் ஒரு தனிக் குடியிருப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாம்.

இங்கு இந்தியர்களைக் குடியேறச் செய்வதற்காக, வீடு கட்டிக் கொள்ள நீண்ட காலத் தவணையில் கடன் தருவதாயும், சொந்த வீடு கட்டிக்கொள்ள வேறு பல நல்ல வசதிகளையும் செய்து தருவதாயும் கூறி சர்க்கார் ஆசை காட்டுகின்றனராம்.

ஆனால், டிரான்ஸ்வால் இந்தியக் காங்கிரஸ் இந்த ஆசை வார்த்தைகளுக்கு இந்தியர் மயங்கக்கூடாது என்றும், இன ஒதுக்கலை அனுமதிக்க முடியாதெனவும் கூறி, திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

சென்னைக்கு அதிகக் குடிதண்ணீர் விநியோகம்

இயந்திர வடிகட்டிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படுகிறது

சென்னை, நவ. 9—

16 இலட்சத்திற்கும் அதிகமாக மக்கள் வசிக்கும் சென்னை நகரத்திற்கு தற்போது 250 இலட்சம் காலன் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் 100 காலன் குடிதண்ணீரை விநியோகம் செய்வதற்கு ரூ 25 இலட்சம் செலவில் துரிதமான இயந்திர வடிகட்டிகளை சென்னை நகரசபை அமைக்கப்போகிறது; இதற்கு நவ. 14-ந் தேதி மாலையில், கீழ்ப்பாக்கத்தில், குடியரசுத் தலைவர் இராசேந்திரர் அடிப்படைக் கல் நாட்டுவார்.

அ. இ. கைத்தறி வாரம்

சென்னை, நவ. 9—

டிசி. 5-ந் தேதி முதல் 11-ந் தேதி வரையில் அகில இந்திய கைத்தறி வாரம் இந்தியா முழுமையும் கொண்டாடப்படும் என்று அதிகார பூர்வமாகத் தெரிய வருகிறது.

கைத்தறித் துணிகளை உபயோகித்து, அத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கைக்கு வழிகோலுவதற்கு ஊக்கமளிப்பதுதான் இக் கொண்டாட்டத்திற்கான நோக்கமாகும்.

காரணம் என்னவோ?

சென்னை, நவ. 8—

சித்தூர் மாவட்டத்தில் ஆந்திரப் பிரதேசப் பகுதியில் தமக்குச் சொந்தமாக உள்ள சுமார் 100 ஏக்கர் புஞ்சை நிலத்தை ஏழைகளுக்கு இலவசமாக விநியோகிப்பதற்கு உத்தேசித்திருப்பதாக சென்னை நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர் கூறியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.